**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 102/2015**
**நாள் 09/02/2026 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – வெங்கடேசன் (DW1) | த/பெயர் – |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை–**

1. என் தரப்பில் 4 ரசீதுகள் பி.சா ஆ 1 முதல் 4 வரை தாக்கல் செய்துள்ளேன். ஆனால் அதன் விவரங்களை பற்றி என்னுடைய பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். மேற்படி ஆவணங்கள் பற்றி பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றும் ஏனென்றால் அன்றைய தேதியல் அந்த ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் வாதியை குறுக்கு விசாரணை செய்வற்கு முன்பு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா ஆ 11 ஆவணமானது எனக்கும் வாதிக்கும் இடையே ஏற்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா ஆ 1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் அஜித்குமார் கோத்தி அன்ட் சன்ஸ் நிறுவனம் கொடுத்ததாக உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தொியாது.

2. வா.சா ஆ 11 ஆவணமானது 15.03.2005 தேதியிட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் அனைத்தும் 13.08.2008 தேதியிட்ட ஒப்பந்தம் என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா ஆ 11 க்கு 3 வருடங்கள் கழித்து தான் பி.சா ஆ 1 முதல் 4 ஆவணங்கள்

ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.சா ஆ 1 முதல் 4 ஆவணங்களுக்கும் வா.சா ஆ 11 கிரைய ஒப்பந்ததிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அறுவடை இயந்திரம் வாங்குவதற்காக வாதியிடம் ஒப்பந்தம் போட்டோம் என்றும் வா,.சா ஆ 11 மற்றும் 12 செல்லாது என வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை. நான் மேற்கூறுவது போல் இருந்திருந்தால் வாதியின் மீது வழக்கு தாக்கல்செய்திருப்பேன் என்றும் நான் கூறும் விவரங்கள் தவறு என்பதால் தான் அவ்வாறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. வா.சா ஆ 11 தேதிக்கு முன்னர் வழக்கு சொத்தை பொருத்து நான் வங்கியில் கடன் பெற்றிருந்தேன் என்றால் சரிதான். மார்ச் 2005 க்கு முன்னர் வங்கி கடனை தீர்த்து அதன் பின்னிட்டு தான் வாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். பொன்னேரி கூட்டுறவு வங்கியில் கொடுத்திருந்த அசல் அவணங்கள் அனைத்தையும் பெற்று அதை வாதியிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். வாங்கிய கடனிற்கு செக்கியுரிட்டிக்காக அசல் ஆவணங்களை வாதியிடம் கொடுக்கவில்லை என்றும் அவர் வாதி முழு கிரைய தொகையை கொடுத்து கிரைய ஒப்பந்தம், பொது அதிகார பத்திரம் மற்றும் கிரைய ரசீது ஏற்படுத்தியததால் தான் அனைத்து அசல் ஆவணங்களையும் அவரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

4. நான் வாதியிடம் 2 லட்சம் பெற்றேன் என்றால் முதலில் ரூபாய் 1,00,000/– கொடுத்தார் பின்னர் பொது அதிகாரம் பதிவு செய்யப்பட்ட பின்னர் மேலும் 1,00,000/– கொடுத்தார். வா.சா ஆ 11 கிரைய தொகையாக நிர்ணயம் செய்யப்பட்ட ரூபாய் 2,00,000/– முழுமையாக

செலுத்தப்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் தான் 07.07.2007 தேதியன்று கிரைய ரசீது ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அறுவடை இயந்திரத்தின் விலை எவ்வளவு என்றால் ரூபாய் 5 லட்சம். அதற்கு கடனாக வாதியிடம் 2 லட்சம் வாங்கினேன், நான் ரூபாய் 3 லட்சம் கையில் வைத்திருந்தேன். அறுவடை இயந்திரம் புதியதா அல்லது உபயோகப்படுத்தப்பட்டிருந்ததா என்றால் ஏற்கெனவே உபயோக படுத்தியதை தான் வாங்கினேன். மேற்படி இயந்திரத்தை யாரிடம் வாங்கினேன் என்றால் சேலத்தில் வாங்கினேன், அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. பணம் வாங்கியதற்கு ரசீது எதுவும் பெறவில்லை. மேற்படி விவரங்கள் எதுவும் பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. அறுவடை வாங்குவதற்காக கடன் வாங்கியதற்கு ஒப்பந்தம் போடப்படவில்லை என்றும் வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்காக தான் ஒப்பந்தம் போடப்பட்டது என வாதி வழக்கில் கூறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அறுவடை ஆவணம் வாங்கியதற்கோ அதை நான் உபயோகபடுத்தியதற்கோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணங்கள் கொடுத்தது தான் கடனிற்கு சாட்சி, வேறு எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. நான் வாங்கியதாக கூறும் அறுவடை இயந்திரத்தை எவ்வளவு நாட்கள் உபயோகப்படுத்தினேன் என்றால் சுமார் 3 முதல் 4 வருடங்கள் உபயோகப்படுத்தினேன். மேற்படி அறுவடை இயந்திரம் என்னிடம் இருந்ததை காண்பிக்க ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**